மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தக் காரணத்தினால் குழந்தைகள் கனம் உறுப்பினர் சொல்வதைப் போன்று பிறக்கின்றன என்பதை குறித்து எனக்கு அவ்வளவாகத் தெரியாது. நம்முடைய தமிழ் நாட்டை பொறுத்தவரையில். விளையாட்டுப் போட்டிகளில் நம்முடைய மாணவர்களுக்கு உற்சாகம் அதிகமாகவே இருந்து வருகிறது என்றுதான் நான் நினைக்கிறேன். நேற்று முன்தினம்கூட ஒரு கல்லூரிக்கு நான் சென்றிருந்தேன். அங்கே பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் ஒரு திறந்த வெளி விளையாட்டு அரங்கை மிகச் சிறப்பாக அமைத்து ஏராளமான மாணவர்கள் உற்சாகமாக விளையாடியதையும், பரிசுகளைப் பெற்றதையும் நான் பார்த்தேன். தமிழ்நாட்டு மாணவச் சமுதாயம் கனம் உறுப்பினர் அவர்கள் கருதுவதைப் போல், பின்வாங்கிவிடாது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டத்தில் பல உயர்நிலைப் பள்ளிகளில் பெண்கள் அதிகமாக இருந்தும். பெண்களுக்காகத் தனியாக உடற்பயிற்சி ஆசிரியைகள் நியமிக்கப்படாததால் பெண்கள் உடற்பயிற்சி பெற முடிவதில்லை. ஆகவே, நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் உள்ள பள்ளிகளில் தனியாக ஒரு உடற்பயிற்சி ஆசிரியையை நியமிக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியைகள் நியமிக்கப்படுகின்றனர். இருவரும்சேர்ந்து படிக்கின்ற பள்ளிகளில், எங்கெங்கு அதிகமாகப் பெண்கள் இருந்து, அவர்களுக்கு உடற்பயிற்சி ஆசிரியைகள் தேவைப்படுகிறார்களோ அப்போதைக்கப்போது அது பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : உடல் வளர்ச்சிக்கும் மன வளர்ச்சிக்கும் ஏதுவாக உடல் பயிற்சி அளிப்பதோடு யோகாசனப் பயிற்சி அளிப்பது பற்றியும் அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யோகாசனப் பயிற்சியில் நம்பிக்கை உள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அதைக் கொஞ்சம் அதிகமாகச் செய்துவிட்டால் வேறு ஆபத்து வந்துவிடும் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். அங்கேயுள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள், எது எதிலே தங்களுக்குப் பயிற்சி கொடுக்க வாய்ப்பு இருக்கிறதோ அதையெல்லாம் கொடுத்து வருகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that when myself and the Minister were students in the college, regular classes for physical drill were conducted, that now-a-days they have been given up and the students are allowed to take part only in games like cricket, football, etc., and that there are no regular drill classes for the students? Will the Government think of the possibility of introducing drill classes again?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் படிக்கும்போதும் சரி, இப்போதும் சரி, மாணவர்களுக்கு டிரில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஏராளமான விளையாட்டுக்கள் பெருகி, மாணவர்கள் விளையாட்டிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். விளையாட்டு வசதிகளும் அதிகமாகப் பெருகி வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் சிறு தொழிற்சாலை.

* 219 வினா. **திரு. கே. போஜன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு சிறு தொழில் கார்ப்பரேஷனின் கீழ் ஒரு சிறு தொழிற்சாலை ஏற்படுத்த அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால், என்ன தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, சிறு தொழில் கார்ப்பரேஷன், ஏனைய மாவட்டங்களில் தொழிற்சாலைகளை அமைத்து அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. அதுபோல, நீலகிரி மாவட்டத்திலும், அங்குள்ள இயற்கை அமைப்புக்கிணங்க, ஒரு சிறு கைத்தொழிற்சாலையை ஏற்படுத்தினால், அங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டம் தீரும் ; ஆகவே, அங்கு சிறுதொழில் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு சிறு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீலகிரி மாவட்டத்தின் முன்னேற்றத்தில் கனம் உறுப்பினர் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். அரசாங்கம் அந்த மாவட்டத்தின் நலனில் எந்த அக்கறை கொள்ளவேண்டுமோ அதையெல்லாம் எடுத்துக்கொண்டு, செய்து வரும். தொழில் கார்ப்பரேஷன் மூலமாக அவர்கள் தொழில் ஆரம்பிப்பதாக இருந்தாலும் சரி, சிறு தொழில் நடத்துவதற்கு அங்குள்ள மக்கள் முன்வந்தாலும் சரி, அரசாங்கம் பரிசீலிக்கத் தயாராய் இருக்கிறது. ஏதோ குறிப்பிட்ட சில தொழில்களை அங்கே நடத்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகக் கனம் உறுப்பினர் கருதினால், அதைப் பரிசீலித்துச் சொன்னால், அதைச் செய்வதற்கு அரசு முன்வரும். கனம் உறுப்பினர் அத்தகைய யோசனையைத் தெரிவித்தால், அதையும் இந்தக் கார்பரேஷனுக்கு அனுப்பிப் பரிசீலிக்கச் செய்கிறேன்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் தொழில் ஆரம்பிக்க முன்வந்தால் அரசு ஆதரவு தருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையில், வலிவற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முன்னேற வேண்டுமென்பதற்காகப் பல திட்டங்கள் இருக்கின்றன. அதற்கும் கனம் உறுப்பினர் அவர்களும் அங்குள்ள மக்களும் முன்வந்தால், எந்த எந்தத் தொழில்கள் ஆரம்பிக்கப் படலாம் என்பதைப் பரிசீலித்துச் சொன்னால் அதற்குப் பண உதவியோ, வேறு எந்த உதவியோ, கச்சாப் பொருளோ (ரா மெட்டீரியல்ஸ்) தேவைப் பட்டால், அவற்றைத் தர அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. சி. நஞ்சன் : நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் பகுதியில் பெரும்பாலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால், தேயிலைத் தோட்டத்தில் குறிப்பிட்ட நபர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. குடும்பத்தில் நான்கைந்து பேர்களுக்கு வேலையில்லாமல், அதிக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கின்ற காரணத்தையொட்டி, கூடலூர் பகுதியில் ஏதாவதொரு தொழிலை ஆரம்பிக்க இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூடலூர் பகுதியைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

மதுராந்தகம் வட்டத்திலுள்ள ஒங்கூர் அணைக்கட்டு.

*220 வினா. **திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டத்தில் ஒங்கூர் அணைக்கட்டுக் கட்ட ஒதுக்கப்பட்ட ரூபாய் எவ்வளவு ?

(இ) அதில் இதுவரை (1968) எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அணைக்கட்டு வேலையும் அதன் மூலமாக ஏரிகளுக்கு செல்லும் Supply Channel வேலையும் முடிந்து விட்டனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஒங்கூர் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்றை ரூபாய் 1,80,300 செலவில் கட்டும் பணிக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

(இ) இத்திட்டத்திற்கு ஏற்பட்ட செலவு ரூ. 2,50,463 ஆகும்.

(உ) இப்பணி முடிவடைந்துவிட்டது.